13.07.2026
O.S.No. 233 / 2021
.வா.சா.1– குணசேகரன்

**<u>வா.சா 1– சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் எம்.எஸ்ஸி கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்துள்ளேன். நான் தனியார் இஞ்சினியரிங் கல்லூரியில் பணிபுரிந்துவிட்டு அந்த வேலையை ராஜினாமா செய்துவிட்டு விவசாயம் செய்து வருகிறேன். 2019ம் ஆண்டு நான் வேலை பார்த்துவந்தேன். பிரதிவாதி எனக்கு சித்தப்பா மகனாவார். பிராதிலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும் அவர் சித்தப்பா மகன் என்று நான் குறிப்பிட வில்லை என்றால் சரிதான். நான் கல்லூரியில் பணிபுரியும்போது எனது சம்பள பணத்திற்கு வருமான வரி செலுத்தினேன். அந்த வருமான வரி கணக்கில் பிரதிவாதிக்கு நான் கொடுத்ததாக கூறும் கடன் தொகையை காட்டவில்லை. நானும் பிரதிவாதியும் 2018ம் ஆண்டு அம்மன் பேக்கரி என்ற பெயரில் பேக்கரி வைத்து நடத்தினோம் என்றால் சரியல்ல. அந்த பேக்கரி நடத்தும்போது நான் பைனான்ஸ் தொழில் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அதற்கு பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பினார். அந்த பதில் அறிவிப்பில் அவர் கூறியுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அந்த பதில் அறிவிப்பை மறுத்து பதில் மறுஅறிவிப்பு நான் அனுப்பவில்லை. நான் ஒட்டன்சத்திரம் வினாயகா பெட்ரோல் பங்கில் பெட்ரோல் போடுவது சம்மந்தமாக எனக்கும் அங்கிருந்தவர்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு அது சம்மந்தமாக என் மீது ஒரு புகார்கொடுக்கப்பட்டு அதன்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் பிரதிவாதியின் காரை போலீசார் கைப்பற்றினார்கள் என்றால் பிரதிவாதி அவருடைய காரை எடுத்து வந்து பிரச்சனை செய்ததால் கைப்பற்றினார்கள்.

அந்த குற்றவியல் வழககில் பிரதிவாதியை எதிரியாக காட்டப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு சொந்தமான ரூ.20 லட்சம் மதிப்புள்ள இன்னோவா காரை நான் எடுத்துச்சென்று, பிரச்சனை செய்து குற்றவியல் வழக்கானதால் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த காரை இதுவரை நான் மீட்டுத்தரமால் பிரதிவாதியிடமிருந்து தப்பிப்பதற்காக பிரதிவாதியின் கையெழுத்தை போர்ஜரி செய்து தாவா புரோநோட்டை நான் உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மாமியார் பெயர் வசந்தியாகும். என் மாமியாருக்கு 2 மகள்கள் மற்றும் ஒரு மகன். மகன் இறந்துவிட்டார். என் மாமியாரும் என் மனைவியின் அக்காவான ேஹமாவும் சேர்ந்து பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விபரம் எனக்கு தெரியாது. எந்த தேதியில் எங்கு வைத்து பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டார் என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சிகளாக காட்டப்பட்டுள்ள பழனிச்சாமி, தண்டபானி ஆகிய இருவரும் எனது உறவினர்களா என்றால் பழனிச்சாமி எனது தூரத்து உறவினராவார். அவர் பிரதிவாதிக்கும் உறவினராவார். சாட்சி தண்டபானியை பிரதிவாதி அழைத்து வந்தார். மேற்படி இரண்டு சாட்சிகளையும் விசாரித்தால் தாவா புரோநோட்டின் உண்மைத்தன்மை தெரியவரும் என்றால் சரிதான். தாவா புரோநோட்டை 10.05.2019 ம் தேதி காலை 10.00 மணியளவில் என் வீட்டில் வைத்து பிரதிவாதி பணம் பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்தார். அது என்ன கிழமை என்று எனக்கு தெரியாது. 500 ரூபாய் கட்டுகளாக மொத்தம் 30 கட்டுகளை ரூபாய் பதினைந்து லட்சமாக நான் கொடுத்தேன். புரோநோட்டு தேதியில் பதினைந்து லட்சம் என் கைவசம் இருந்தது என்பதை காட்ட என்னிடம் ஆவணம் இல்லை. கொஞ்சம் கொஞ்சமாக சேமித்து வைத்திருந்த பணமாகும். தாவா புரோநோட்டில் ஸ்டாம்பில் உள்ள கையெழுத்தும் அதற்கு கீழே உள்ள கையெழுத்திற்கும் இடையே வித்தியாசம் உள்ளது என்றால் சரியல்ல. நான் என் மாமியார் மற்றும் என் மனைவி அனைவரும் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம்.

என் மாமியார் இதே பிரதிவாதிக்கு 27.01.2019 ம் தேதி ரூபாய் பதினான்கு லட்சம் கொடுத்த விபரம் எனக்கு தெரியும். அது என் வீட்டில் வைத்து கொடுக்கப்பட்டது. நானும் என் மாமியாரும் ஒரே வீட்டில் குடியிருந்து கொண்டு ஏற்கனவே பிரதிவாதி வாங்கிய கடனை வட்டியோடு திரும்ப செலுத்தாத நிலையில் மேற்கொண்டு கடன் கொடுத்ததாக கூறுவது நம்பக்கூடியதாக இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ரூபாய் பதினைந்து லட்சம் ஒரே தவணையில் கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. ரூபாய் 2 லட்சத்திற்கு மேல் வங்கி பரிவர்த்தனை மூலம் பணம் கொடுக்காமல் ரொக்கமாக பணம் கொடுத்ததாக நான் கூறியுள்ள சங்கதி சட்டப்படி ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. ரூபாய் பதினைந்து லட்சத்தை வருமான வரி கணக்கில் நான் காட்டாததால் அது சட்டப்படியான கடன் அல்ல என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்தை கையெழுத்து நிபுனரின் பரிசோதனைக்கு பிரதிவாதி அனுப்புவதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் பிராதில் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில்கூறியிருப்பது போன்று என்னிடம் 10.05.2019 ம் தேதி ரூபாய் பதினைந்து லட்சம் பிரதிவாதி கடன் வாங்கவில்லை என்றும், அதற்கு ஆதரவாக தாவா புரோநோட்டை எழுதி தரவில்லை என்றும், பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட காரை குற்ற வழக்கிலிருநது மீட்டு ஒப்படைக்காமல் அதிலிருந்து தப்பிப்பதற்காக பிரதிவாதியின் கையெழுத்தை மோசடி செய்து தாவா வழககை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ளது பிரதிவாதியின் கையெழுத்து அல்ல என்றும், அது உரிய மறுபயனுக்கு உட்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ள தொகையை பிரதிவாதி செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றும், எனது வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.,

மறுவிசாரணை – இல்லை

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.07.13 16:10:35 +0530

Principal District Judge,
Dindigul.